**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 55/2023**

**Deposition of witness for prosecution : PW - 1 (LW- 1 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **சரத்குமார்** | **Father's Name** | கருணாநிதி |
| **Village** | | **Taluk** | |
| **Age** | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 01.09.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யத்தில் வசித்து புகைப்பட கலைஞராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 4,5 வருடங்களுக்கு முன்னர் நான் வேதாரண்யம் மெயின்ரோட்டில் வேலைக்கு சென்று விட்டு திரும்ப வந்து கொண்டிருந்தபோது என்னை யாரோ அடித்தார்போல் இருந்தது. இருட்டாக இருந்ததால் என்னை யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. எந்த ஆயுதத்தை வைத்து தாக்கினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் இருசக்கர வாகனத்தில்வந்த ஒருவரிடம் லிப்ட் கேட்டு வந்து கொண்டிருந்தேன். எனக்கு காயம் ஏற்பட்டபோது சம்பவ இடத்திலேயே மயக்கம் வந்து அங்கேயே விழுந்து விட்டேன். மறுநாள் காலை மருத்துவமனையில் இருந்தபோதுதான் எனக்கு நினைவு திரும்பியது. வேதாரண்யம் போலீசார் என்னிடம் வெற்று காகித்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>சாட்சியின் வாக்குமூலம் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 24.01.2022 ம் தேதி நான் வேலை பார்க்கும் ஸ்டுடியோவில் வேலையை முடித்து விட்டு இரவு

காலதாமதமானதால் எனது நண்பர் வேதாரண்யம் கொள்ளித்தீவு முகவரியை சேர்ந்த ஹரிஹரன் என்பவருடன் அவருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளில் இருவரும் வந்து கொண்டிருந்தோம் என்றும், 25.01.2022ம் தேதி இரவு 1.30 மணியளவில் நாங்கள் வேதாரண்யம் வள்ளியம்மை சாலையில் அமைந்துள்ள வனதுர்க்கை அம்மன் ஆலயம் அருகில் உள்ள குளத்தின் தென்கரை வழியாக செல்லும்போது அந்த சாலையில் TN 51 B 5938 என்ற பதிவெண்கொண்ட டிராக்டரை ஓட்டிவந்த அப்பு என்கிற சிவகணேஷ் எங்கள்வா கனத்தின் மீது மோத பார்த்தார் என்றும், நாங்கள் இறங்கி ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டோம் என்றும், அப்போது அவர் உன்னை தீர்த்து கட்டுவதற்குதாண்டா முயற்சி செய்கிறோம் என்று சொல்லி கொச்சை வார்த்தைகளால் திட்டி உன் சாவு என்கையால்தாண்டா என்று கூறி அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என்னை குத்துவதற்கு துரத்தினார் என்றும், நான் தப்பித்து அருகில் உள்ள தோப்பில் மறைந்து கொண்டேன் என்றும், என்னை கண்டுபிடித்து இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த கத்தியால் என் தலையில் வெட்டவந்தபோது நான் ஒதுங்கி தடுத்தேன் என்றும், அந்த வெட்டானது எனது இடது பக்க கன்னத்தில் விழுந்து ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், என்னுடன் வந்த ஹரிஹரன் சத்தம் போட்டதும் எதிரி அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார் என்றும், என்னை ஹரிஹரனும், முஜிபுர் ரஹ்மானும் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**